**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.73/2017**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 01.082025 | தகப்பனார் பெயர்: | ஆறுமுகம் |
| பெயர்: | செல்வ அய்யனார் (PW-2 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 57/2025 |

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 01.08.2025**</u>

1. நான் இந்த வழக்கில் வாதி கிடையாது. எனது தாயார் தான் வாதி. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணங்கள் எதுவும் எனது பெயரில் இல்லை என்றால் சரிதான். என் தாயார் பெயரில் உள்ளது என்றாலும் சரிதான். 02.02.1976–ம் தேதியிட்ட வா.சா.ஆ.1 ஆவணம் கிரயம் பெற்றபோது கிழமேல் 30 அடி, தென்வடல் 55 அடி மட்டும்தான் வாதி வசம் எடுத்து குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல 30X100 அடி கிரயம் பெற்றார். 30X100 கிரயம் பெறவில்லை 30X55 என்று கிரயம் பெற்று குடியிருந்து வருகீறிர்கள் என்றால் சரியல்ல. சீர்காழி நகராட்சியில் வழங்கப்பட்ட நகர அளவை பதிவேடு ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சீர்காழி நகராட்சியால் வழங்கப்பட்ட பட்டா ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. வா.சா.ஆ.1.ல் உள்ள சொத்து விபரத்தில் உள்ள நான்கெல்லைபடி இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ல் உள்ள

நான்கெல்லைக்கும் இந்த அசல் வழக்கின் பிராதிற்கும் உள்ள சொத்து விபரத்தில் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ல் உள்ள சொத்து விபரம் மட்டும்தான் எனக்கு பாத்தியப்பட்டது என்பதால் அதை பொறுத்துதான் வாதி பரிகாரம் கோர முடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1–ல் குறிப்பிட்டுள்ள நான்கெல்லைக்கு அப்பால் தென்வடலாக சுமார் 30 அடி துரம் கழித்து பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால் இல்லை 100 அடி இடம் கழித்துதான் பிரதிவாதி குடியிருந்து வருகிறார். அம்பலவாணன் மகன் ராஜமாணிக்கம் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராஜமாணிக்கம் மகன் நடராஜன் என்பவரின் மீது வாதி அசல் வழக்கு எண்.128/2016 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.